**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
*******
2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 02 – ம் நாள் வியாழக்கிழமை
******
**இடைமனு எண்.1/2022–ல் அசல் வழக்கு எண். 160/2009**

1. G.ராஜமாணிக்கம் (இறந்தார்) ... 1–ம் மனுதாரர்/வாதி
2. R. ஆழகுமதி
3. R.அமபிகா
4. R.சுதன் .....2 முதல் 4 மனுதாரர்கள்/ வாதியின் வாரிசுகள்

...எதிர்...

1. ஜோதி
2. மூர்த்தி

....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.10.2023 அன்று இறுதியாகவிசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு E.செல்வராஜ் அவர்களும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு V.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகி இருந்து 11.08.2023–ம் தேதியன்று 1–ம் எதிமனுதாரரின் வழக்கறிஞர் எதிருரை தாக்கல் செய்யவில்லை என மேற்குறிப்பு செய்து கொடுத்துள்ளார். 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்கள் ஆஜராகியிருந்தும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## உத்தரவு

அசல் வழக்கில் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 தரப்பினர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்க வாரிசு மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1074 நாட்கள் கால தாமதத்தை மன்னித்து அபேட்மெண்ட் மனுவையும், வாரிசு மனுவையும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு காலவரையரைச்கட்டம் பிரிவு–5–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

அசல் வழக்கில் 2 முதல் 4 மனுதாரர்கள் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகள். அசல் வழக்கு இறந்த வாதி ராஜமாணிக்கம் என்பவர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கின் வாதி ராஜமாணிக்கம் கடந்த 09.04.2019 அன்று இறந்துவிட்டார். இறந்த ராஜமாணிக்கத்திற்கு மனைவி என்ற முறையில் 2-ம் மனுதாரும், மகள்என்ற முறையில் 3-ம் மனுதாரரும், மகன் என்ற முறையில் 4-ம் மனுதாரரும் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். இவர்களை தவிர இறந்த ராஜமாணிக்கத்திற்கு வேறு வாரிசுகள் கிடையாது. மேற்படி ராஜமாணிக்கம் கொடுக்க வேண்டிய தொகைகளுக்கும், அவருக்கு வேரவேண்டிய தொகைகளுக்கும் 2 முதல் 4 வரையிலான மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள். 2 முதல் 4 வரையிலான தரப்பினர்களை ராஜமாணிக்கதின் வாரிசுகளாக தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ராஜமாணிக்கம் இறந்த 09.04.2019 முதல் 90 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்ய வேண்டும். அதன் பிறகு 60 நாட்களுக்குள் அதாவது 150 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதமாதன 1074 நாட்கள் காலதாமதமாகிவிட்டது. வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் 1074 நாட்கள் காலதாமத்தை மன்னித்து இத்துடன் தாக்கல்

செய்துள்ளஅபேட்மெண்ட் மனுவையும், வாரிசு மனுவையும் கோப்பிற்கு எடுக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லை என்றால் ஏராள கஷ்டமும், நஷ்டுமும் சம்பவிக்கும். எனவே அசல் வழக்கில் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 தரப்பினர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்க வாரிசு மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1074 நாட்கள் கால தாமதத்தை மன்னித்து அபேட்மெண்ட் மனுவையும், வாரிசு மனுவையும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

மனு சட்டபடியும், நியாயப்படியும் சரியல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. இந்த எதிருரையில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இடைனுவில் கண்டுள்ள சங்கதிகளை 2-ம் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். அவற்றை நிரூபிக்க 2 முதல் 4 மனுதாரர்கள்/வாதியின் வாரிகள் கடமைப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கின் வாதி ராஜமாணிக்கம் இறந்து விட்டார் என்பது உண்மை. அவரது வாரிசுகள் 2 முதல் 4 மனுதார்கள்/வாதியின் வாரிசுகள் மட்டுமே என்பது தவறு. ஏனெனில் இறந்த ராஜமாணிக்கத்திற்கு முதல் மனைவி அழகுமதி ஆவார். அவரை சட்டப்படி பிரிந்த பிறகே இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதியான ஜோதி என்பவரை 2-வது திருமணம் செய்து கொண்டார். மேற்படி ஜோதிக்கும், ராஜமாணிக்கமத்திற்கும் பிறந்த பிள்ளைகள் சுவாதி மற்றும் பிரியா ஆவார்கள். எனவே இறந்த ராஜமாணிக்கத்திறகு 2 முதல் 4 மனுதாரர்கள் மற்றும் ஜோதி, சுவாதி மற்றும் பிரியா ஆகிய நபர்களும் வாரிசுகள் ஆவார்கள். இவர்களை வேண்டுமென்றே இவ்வழக்கில் மறைத்து கரைபடிந்த கரங்களுடன் இந்த மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் குறிபிட்டுள்ள அதே முகவரியில்தான் இறந்த ராஜமாணிகத்தின் 2-வது மனைவி ஜோதியும் அவர்களுக்கு பிறந்த பிள்ளைகளான சுவாதி மற்றும் பிரியாவும் வசித்து வந்தார்கள். இதனை உரிய முறையில்

இவ்வழக்கில் நிரூபிக்க 2-ம் பிரதிவாதி தயாராக உள்ளார். இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளை சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 1074 நாட்கள் காலதாமத்தை மன்னிக்க எந்த ஒரு காரணத்தையும் பெயருக்கு கூட இந்த இடைமனுவில் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்தே இடைமனு தூய கரத்துடன் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும், அதனால் தான் அதற்காக காணரத்தையும் இந்த இடைமனுவில் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. எனவே மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைக்கு**

3. மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் 2 முதல் 4 மனுதாரர்கள் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் என்றும், அசல் வழக்கு இறந்த வாதி ராஜமாணிக்கம் என்பவர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கின் வாதி ராஜமாணிக்கம் கடந்த 09.04.2019 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த ராஜமாணிக்கத்திற்கு மனைவி என்ற முறையில் 2-ம் மனுதாரும், மகள்என்ற முறையில் 3-ம் மனுதாரரும், மகன் என்ற முறையில் 4-ம் மனுதாரரும் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள் என்றும், இவர்களை தவிர இறந்த ராஜமாணிக்கத்திற்கு வேறு வாரிசுகள் கிடையாது என்றும், மேற்படி ராஜமாணிக்கம் கொடுக்க வேண்டிய தொகைகளுக்கும், அவருக்கு வேரவேண்டிய தொகைகளுக்கும் 2 முதல் 4 வரையிலான

மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள் என்றும், 2 முதல் 4 வரையிலான மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் ராஜமாணிக்கதின் வாரிசுகளாக தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ராஜமாணிக்கம் இறந்த 09.04.2019 முதல் 90 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அதன் பிறகு 60 நாட்களுக்குள் அதாவது 150 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதமாதன 1074 நாட்கள் காலதாமதமாகிவிட்டது என்றும், வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் 1074 நாட்கள் காலதாமத்தை மன்னித்து இத்துடன் தாக்கல் செய்துள்ளஅபேட்மெண்ட் மனுவையும், வாரிசு மனுவையும் கோப்பிற்கு எடுக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லை என்றால் ஏராள கஷ்டமும், நஷ்டுமும் சம்பவிக்கும் என்றும், எனவே அசல் வழக்கில் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்க வாரிசு மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1074 நாட்கள் கால தாமதத்தை மன்னித்து அபேட்மெண்ட் மனுவையும், வாரிசு மனுவையும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் வாதியின் வாரிசுகள் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

6. பிரதிவாதிகள் தரப்பில், மனு சட்டபடியும், நியாயப்படியும் சரியல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றும், இந்த எதிருரையில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இடைனுவில் கண்டுள்ள சங்கதிகளை 2-ம் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார் என்றும், அவற்றை நிரூபிக்க 2 முதல் 4 மனுதாரர்கள்/வாதியின் வாரிகள் கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், இவ்வழக்கின் வாதி ராஜமாணிக்கம் இறந்து விட்டார் என்பது உண்மை என்றும், அவரது வாரிசுகள் 2 முதல் 4 மனுதார்கள்/வாதியின் வாரிசுகள் மட்டுமே என்பது தவறு என்றும், ஏனெனில் இறந்த ராஜமாணிக்கத்திற்கு முதல் மனைவி அழகுமதி ஆவார் என்றும், அவரை சட்டப்படி பிரிந்த பிறகே இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதியான ஜோதி என்பவரை 2-

வது திருமணம் செய்து கொண்டார் என்றும், மேற்படி ஜோதிக்கும், ராஜமாணிக்கமத்திற்கும் பிறந்த பிள்ளைகள் சுவாதி மற்றும் பிரியா ஆவார்கள் என்றும், இறந்த ராஜமாணிக்கத்திறகு 2 முதல் 4 மனுதாரர்கள் மற்றும் ஜோதி, சுவாதி மற்றும் பிரியா ஆகிய நபர்களும் வாரிசுகள் ஆவார்கள்என்றும், இவர்களை வேண்டுமென்றே இவ்வழக்கில் மறைத்து கரைபடிந்த கரங்களுடன் இந்த மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் குறிபிட்டுள்ள அதே முகவரியில்தான் இறந்த ராஜமாணிகத்தின் 2-வது மனைவி ஜோதியும் அவர்களுக்கு பிறந்த பிள்ளைகளான சுவாதி மற்றும் பிரியாவும் வசித்து வந்தார்கள் என்றும், இதனை உரிய முறையில் இவ்வழக்கில் நிரூபிக்க 2-ம் பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளை சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 1074 நாட்கள் காலதாமத்தை மன்னிக்க எந்த ஒரு காரணத்தையும் பெயருக்கு கூட இந்த இடைமனுவில் குறிப்பிடப்படவில்லை என்றும், இதிலிருந்தே இடைமனு தூய கரத்துடன் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும், அதனால் தான் அதற்காக காணரத்தையும் இந்த இடைமனுவில் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு இறந்த வாதி ராஜமாணிக்கம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கின் வாதி ராஜமாணிக்கம் கடந்த 09.04.2019 அன்று இறந்துள்ளார். இறந்த ராஜமாணிக்த்திற்கு வாரிசு மனு தாக்கல் செய்ய 1074 நாட்கள் கால தாமத்தை மன்னித்து ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 மனுதரர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்க மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் கோரியுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் இறந்த ராஜமாணிக்கத்திற்கு 2-

வது மனைவி ஜோதி மற்றும் அவருக்கு பிறந்த சுவாதி மற்றும் பிரியா என்ற மகள்கள் உள்ளனர் அவர்களை மறைத்து மனுதாக்கல் செய்துள்ளனர் என வாதிடப்பட்டது. இறந்த ராஜமாணிக்கத்திற்கு வேறு வாரிசுகள் உள்ளார்களா என்பதையும், அவர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பதையும் விசாரணையின் மூலமே முடிவுக்கு வர இயலும். மனுதாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட கால தாமதத்திற்கு காரணம் நியாயமானதாக இல்லையெனிலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் வழக்கு தரப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுத்து விசாரணை செய்து தகுதியின் அடிப்படையில் தீர்வு காண்பது இயற்கையின் நீதியாகும். எனவே இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 1 முதல் 4 மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் இவ்வழக்கில் வாதிகளாக சேர்ப்பதற்கு வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1074 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரியுள்ள மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகளின் மனு கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுதிக்காலம் என்று தீர்மானித்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியில் மனுதாரர்கள் 2-ம் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1000/- ஐ 15.11.2023-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 16.11.2023.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 02-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் – இல்லை –
மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை –
எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் – இல்லை –
எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை –

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.1/2022–ல்
அசல் வழக்கு எண்.160/2009
நாள்.02.11.2023.